# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் சாலை சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை – 600 018. தொலைபேசி எண். 044–*2435 7590.*

**ஆணை நாள் – 24.02.2015**

**முன்னிலை**

**திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,**
**மாநில தகவல் ஆணையர்**

**<u>வழக்கு எண்.58002/F/2013</u>**

திரு. A. தேவதாஸ்,
9, புனிதவதியார் தெரு,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம். .. மேல்முறையீட்டாளர்

பொதுத் தகவல் அலுவலர்,
துணை செயலாளர் / நிர்வாகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்
கழகம், செயலகக் கிளை,
144, அண்ணா சாலை,
சென்னை – 600 002. .. பொது அதிகார அமைப்பு

*********

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (24.02.2015) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.A.தேவதாஸ் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. மனுதாரர், 24.02.2015 தேதியிட்ட கடிதம் வாயிலாக, உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லை என்றும், அவர் சார்பாக வழக்கறிஞர் திரு.அ.பிரம்மநாயகம் அவர்களை விசாரணையில் ஆஜராவதற்கு அனுமதிக்கும்படியும் கோரியுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.R.நாராயணன், பொது தகவல் அலுவலர் / துணை செயலாளர் (நிர்வாகம்) மற்றும் திரு.L.வினோத்குமார், உதவி வாரிய

செயலக அலுவலர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், செயலகக்கிளை, சென்னை ஆகியோர் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்கள்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)ன் படியான தனது 27.09.2013 தேதியிட்ட மனுவில் பல்வேறு துணை கேள்விகளுடன் 10 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். இவைகளில் முதல் 4 இனங்களுக்கு பதில் தரப்பட்டுள்ளது, அவை மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 5ஆம் இனத்தைப் பொறுத்தவரை, தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 6(3)–ன் படி சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்பிற்கு அந்த மனு மாற்றம் செய்யப்பட்டு, அந்த பொது அதிகார அமைப்பு (செயற்பொறியாளர் (பொது), திருநெல்வேலி மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வட்டம், திருநெல்வேலி) அவர்கள் 17.10.2013 தேதியிட்ட பதிலை மனுதாரருக்கு அனுப்பியிருக்கிறது. அதில் 5வது இனத்திற்கு பதில் வழங்கப்பட்டிருக்கிறது. அதில் மொத்தம் எத்தனை கோட்டங்களிலிருந்து தகவல் வழங்கப்பட்டுள்ளது என்ற வினாவிற்கு, “இதுபோன்ற தகவல் இவ்வலுவலகத்தில் இல்லை” என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பதில் இல்லை. மேற்படி அலுவலர் (செயற்பொறியாளர் (பொது), திருநெல்வேலி மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வட்டம், திருநெல்வேலி ) மனுதாரர் கோரும் இந்த இனத்திற்கான தகவலை கண்டுபிடித்து, மனுதாரருக்கு இவ்வாணைக் கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்.

3. 6வது இனத்தைப் பொறுத்தவரை, அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஆணையை அமல்படுத்துவது பொறுத்து புகார் மனுவை (RTI சட்டப் பிரிவு 18ன்படி) மனுதாரர் தாக்கல் செய்வதுதான் உகந்ததாக இருக்கும் என இந்த ஆணையம் கருதுகிறது.

4. 7ஆம் இனத்தைப் பொறுத்தவரை, மேற்பார்வைப்பொறியாளர் திரு.சுப்பிரமணியம், திரு.சண்முகசுந்தரம், உதவி செயற்பொறியாளர் மற்றும் மனுதாரரின் வழக்கறிஞர் திரு.பிரம்மா ஆகிய மூவரின் பெயரில், ஆவணங்களை திருடியுள்ளதாக செய்த புகார் மனுவின் நகலை மனுதாரர் கேட்கிறார். அப்படிப்பட்ட புகார் காவல்துறையிடம் கொடுக்கப்படவில்லை என்ற 21.05.2015 தேதிய பதிலை திருநெல்வேலி மேற்பார்வைப் பொறியாளர் வழங்கியிருக்கிறார். ஆக, இந்த இனத்திற்கான தகவல்கள் வழங்கப்பட்டுவிட்டதாக இந்த ஆணையம் கருதுகிறது. மற்ற இனங்களுக்கான தகவல்களுக்கு விசாரணை தேவை இல்லை என்று மனுதாரர் விசாரணையின்போது தெரிவிக்கிறார். 20.01.2015 தேதியிட்ட திருநெல்வேலி மேற்பார்வைப் பொறியாளர் பதிலின் நகல் ஒன்றை விசாரணையின்போதே மனுதாரர் பொதுத் தகவல் அலுவலர் வழங்குகிறார். அதனை மனுதாரரே ஏற்றுக் கொள்கிறார்.

5. இந்நிலையில், இவ்வழக்கில் மேலும் பரிசீலனை செய்ய வேண்டிய அம்சங்கள் ஏதும் இல்லை என்று கருதி இவ்வழக்கு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/– (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.58002/F/2013</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
துணை செயலாளர் / நிர்வாகம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்
கழகம், செயலகக் கிளை,
144, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

செயற்பொறியாளர் (பொது),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
திருநெல்வேலி.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. A. தேவதாஸ்,
9, புனிதவதியார் தெரு,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி மாவட்டம்.

sg/pa/03.03